சுருக்கம்

மத்திய அரசு திட்டம் – இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கான ஓர் அலகிற்கான உதவித்தொகையை 1.4.2010 முதல் ரூ.60,000 ஆக உயர்த்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(மஅதி–1) துறை

அரசாணை(நிலை) எண். 59 நாள்: 25.5.2010

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.91, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 6.6.2008.
2. மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சக இணைச் செயலாளர் அவர்களின் நே.மு.க. எண். G-20011/1/ 2010-RH, நாள்:5.4.2010.
3. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி ஆணையரின் கடித எண். 24498/2010 /ஐஏஒய்.1, நாள் 17.5.2010.

------

**ஆணை:**

படிக்கப்பட்டவை ஒன்றில் காணும் அரசாணையின்படி 2008–09–ஆம் ஆண்டிலிருந்து இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு ஓர் அலகிற்கான உதவித் தொகை சாதாரண தரையில் ரூ.55,000/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதில் மத்திய அரசின் பங்கு ரூ.26,250/– ஆகவும், மாநில அரசின் பங்கு ரூ.8,750/– ஆகவும் மற்றும் கான்கிரீட் மேற்கூரை கட்டுவதற்காக ஒரு வீட்டிற்கு ரூ.20,000/–ம் மாநில அரசின் உதவித் தொகையாகவும் இருந்தது.

2. படிக்கப்பட்டவை இரண்டில் காணும் கடிதத்தின்படி மத்திய அரசானது, 1.4.2010 முதல், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கு வழங்கும் ஓர் அலகிற்கான உதவித் தொகையை சாதாரண தரையில் ரூ.35,000/–லிருந்து ரூ.45,000/– ஆகவும், மலைப் பகுதி / கடின தரையில் ரூ.38,500/–லிருந்து ரூ.48,500/– ஆகவும் உயர்த்தியுள்ளது. இதில் 75% மத்திய அரசின் பங்கீடும், 25% மாநில அரசின் பங்கீடும் ஆகும்.

3. 2010–11–ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கு கலைஞர் வீட்டுவசதி திட்டத்தைப் போலவே ஓர் அலகிற்கான உதவித் தொகை ரூ.60,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்துள்ளார். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 26.4.2010அன்று ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையின் போது இதேபோல் அறிவிப்பு செய்துள்ளார்.

4. மேற்கூறியவற்றின் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் ஒரு வீட்டிற்கு அனுமதிக்கப்படும் தொகையை நிர்ணயித்து, அதனை 1.4.2010 முதல் நடைமுறைப்படுத்த ஆணை வேண்டி அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது:

1.4.2010 முதல் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான அலகுத் தொகை சாதாரண தரை / மலைப் பகுதி / கடின தரையில் கீழ்க்காணுமாறு நிர்ணயிக்கப்படுகிறது:

| புதிய வீட்டிற்கான அலகுத் தொகை | ரூ.60,000 |
|---|---|
| மத்திய அரசின் பங்கு | ரூ.33,750 |
| மாநில அரசின் பங்கு | ரூ. 11,250 |
| மாநில அரசால் கூடுதலாக வழங்கப்படும் காங்கிரீட் கூரை அமைப்பதற்கான நிதி | ரூ.15,000 |

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 1155/ FS/P/2010, நாள் 20.5.2010–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை.
மாநிலக் கணக்காயர், சென்னை–6/18/35.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.

நகல்:
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி(ஊ.வ.(ம) ஊ) துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை அரசு செயலாளரின்
தனிச் செயலாளர், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.